Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 49 | உள்ளூர் - 18.02.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 49 | வெளியூர் - 19.02.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

“பாவம் போக்கும் மாசி மகம்”..!!

லாரிகள் காலவரையற்ற வேலைநிறுத்தம் அறிவிப்பு...

நான் வீழ்வேன் என் நினைத்தாயோ? மாணிக்கம் தாகூர்!

மோடி அரசின் மாஸ்டர் பிளான்?

# மார்ச் 1 மற்றும் 6-ந்தேதி: இருமுறை தமிழ்நாடு வருகை தருகிறார் பிரதமர் மோடி!




சென்னை, பிப். 18–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில், பிரதமர் மோடி, மார்ச்1 மற்றும் 6ந்தேதி என இருமுறை தமிழ்நாடு வருகை தருகிறார்.

மார்ச் 1–ல் மதுரையிலும், 6–ம் தேதி வேலூரிலும் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசுகிறார்.

இதுகுறித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: பிரதமர் மோடியின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை பொறுப்பேற்று வழிநடத்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தலைமையில் மாநில அளவில் குழு அமைக்கப்படுகிறது.

அந்த வகையில், மதுரை பயணத்துக்கு பொறுப்பாளர்களாக மாநில பொதுச் செயலாளர்கள் எம். முருகானந்தம், ராம சீனிவாசன், பொன் வி. பாலகணபதி ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

இதேபோல், வேலூர் சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு பொறுப்பாளர்களாக மாநில துணை தலைவர் கரு. நாகராஜன், மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி, மாநில செயலாளர் வெங்கடேசன் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஏஐ தொழில்நுட்பம் உங்கள் திறமையை பன்மடங்கு பெருக்கும்; பிரதமர் மோடி உத்தரவாதம்!



புதுடெல்லி, பிப். 18–

‘‘ஏஐ தொழில்நுட்பம் உங்கள் திறமையை பன்மடங்கு பெருக்கும். எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தில் மக்கள் திறனை மேம்படுத்துவதில் அரசு முதலீடு செய்து வருகிறது” என இளைஞர்களுக்கு பிரதமர் மோடி உத்தரவாதம் அளித்து உள்ளார்.

டில்லியில் பிப்ரவரி 16ம் தேதி முதல் பிப் 20ம் தேதி வரை 5 நாட்கள் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உச்சி மாநாட்டை இந்தியா நடத்தி வருகிறது. இந்த மாநாட்டில் பல்வேறு நாட்டு பிரதிநிதிகள் பங்கேற்று வருகின்றனர்.

இந்த சூழலில் இளைஞர்கள் மத்தியில் ஏஐ தொழில்நுட்பத்தால் வேலை இழக்கும் சூழல் உருவாகிவிடுமோ என்ற கவலை நீடிக்கிறது. இது தொடர்பாக ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், பிரதமர் மோடி இளைஞர்களுக்கு தெம்பூட்டும் வகையில் பேசி இருக்கிறார். பிரதமர் மோடி கூறியதாவது: ஏஐ தொழில்நுட்பம் உங்கள் திறமையை பன்மடங்கு பெருக்கும். எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தில் மக்கள் திறனை மேம்படுத்துவதில் அரசு முதலீடு செய்து வருகிறது. எந்த சவால்களையும் எதிர்கொள்ள தயாராக இருப்பது தான் பயத்திற்கு மாற்றுவழி.

புதுமை மற்றும் தொழில்நுட்ப புரட்சிகள் வேலைகளை அழிக்கும் என்ற அச்சம் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. இருப்பினும், புதுமைநிகழும்போதெல்லாம், புதிய வாய்ப்புகள் உருவாகின்றன என்பதை வரலாறு நமக்குக் கற்பிக்கிறது.

செயற்கை நுண்ணறிவு யுகத்திலும் இதுவே நிகழும். அதே நேரத்தில் இந்த மாற்றத்திற்கு ஏற்ப இந்தியா ஏற்கனவே நன்கு தயாராக உள்ளது. டிஜிட்டல் மாற்றத்தைத் தொடர்ந்து சில வேலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும். புதிய தொழில்நுட்பங்கள் இந்தியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# பிரதமர் மோடியுடன் கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை சந்திப்பு!



புதுடில்லி, பிப். 18–

டில்லியில் பிரதமர் மோடியை கூகுள் நிறுவனத்தின் சிஇஓ சுந்தர் பிச்சை சந்தித்து பேசினார். 20 நாடுகளின் தலைவர்கள், 45 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் ஏஐ மாநாடு தலைநகர் டில்லியில் கடந்த 16ம் தேதி துவங்கியது. 20ம் தேதி நடைபெறும் இந்த மாநாட்டில் கூகுள், மைக்ரோசாப்ட், ஓபன் ஏஐ உள்ளிட்ட பல்வேறு முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளும் பங்கேற்க இருக்கின்றனர்.

மனிதவள மேம்பாடு, சமுக மேம்பாடு, பாதுகாப்பான ஏஐ தொழில்நுட்பம், அறிவியல் ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு உள்ளிட்ட 7 முக்கிய துறைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட இருக்கிறது.

இந்த நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக கூகுள் நிறுவனத்தின் சிஇஓ சுந்தர் பிச்சை இன்று டில்லி வந்தார். தொடர்ந்து, பிரதமர் மோடியை சுந்தர் பிச்சை சந்தித்து பேசினார். அப்போது, இருவரும் ஏஐயின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடினர். சுந்தர் பிச்சை வரும் 20ம் தேதி ஏஐ மாநாட்டில் உரை நிகழ்த்த இருக்கிறார். அப்போது, ஏஐ தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் முக்கியத்துவம் குறித்து அவர் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தமிழ்ப்பாடகர் சங்கீத சேவகர் சீர்காழி கோவிந்தராஜன் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் கிழக்கு வட்டச் சாலைக்கு ‘‘சீர்காழி கோவிந்தராஜன் சாலை’’ என்று புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர், பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சீர்காழி கோவிந்தராஜன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## மோடி அரசின் மாஸ்டர் பிளான்!!

# அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம்

## எல்லாம் இதுக்கு பக்கத்துல கூட வர முடியாது!!



புதுடெல்லி, பிப். 18–

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பல்வேறு நாடுகளுடன் இந்தியாவின் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அண்மையில் தான் மத்திய அரசும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. கடந்தாண்டு இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. கூடிய விரைவில் இந்தியாவும் அமெரிக்காவும் முதல் கட்ட வர்த்தக ஒப்பந்தத்தை கையெழுத்திடப் போகின்றன.

ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி மிக முக்கியமான ஒரு நடவடிக்கையை மத்திய அரசு எடுத்து இருக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளோடு மேற்கொண்ட ஒப்பந்தம் அனைத்துமே வர்த்தகத்திற்கான ஒப்பந்தம் தான். அதாவது நம் நாட்டில் இருக்கக்கூடிய பொருட்களை அந்த நாடுகளுக்கு குறைந்தபட்ச வரியில் அல்லது வரியே இல்லாமல் கொண்டு சென்று விற்பனை செய்ய முடியும். அதேபோல அந்த நாடுகளை சேர்ந்த பொருட்கள் இந்தியாவில் வரியே இல்லாமல் அல்லது குறைந்தபட்ச வரியில் கொண்டு வந்து விற்பனை செய்ய முடியும். இரு நாடுகளுக்கும் இடையிலான தொழில் போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து எளிமையானதாக மாறும். ஆனால் உலகளவில் நாம் தலைவராக வேண்டும் என்றால் இந்த வர்த்தக ஒப்பந்தம் மட்டும் போதாது. குறிப்பிட்ட பிரிவில் ஆதிக்கம் செலுத்த வேண்டும். அப்படி ஒரு வாய்ப்பு தான் இந்தியாவுக்கு கிடைக்க போகிறது. இந்தியாவிற்கும் சிலிக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சு வார்த்தையில் மிக முக்கியமான ஒரு தொழில் வாய்ப்பு இந்தியாவிற்கு கிடைத்திருக்கிறது. உலகளவில் லித்தியம், தாமிரம், கோபால்ட் உள்ளிட்டவை அரிய கனிமங்களாக அறியப்படுகின்றன. இந்த அரிய வகை கனிமங்கள் அனைத்துமே மின்னணு பொருட்கள் , பேட்டரி, வாகன உற்பத்தி, மருத்துவ உபகரணங்கள், சூரிய மின் உற்பத்தி சாதனங்கள் உள்ளிட்டவற்றில் முக்கியமான பங்கு வகிக்கின்றன. உலகின் பல பகுதிகளில் இவை கிடைத்தாலும் எளிமையாக பூமியில் இருந்து பிரித்தெடுத்து குறைந்த செலவில் இவற்றை நாம் பயன்படுத்தும் கனிமங்களை மாற்ற ஏதுவான வடிவங்களில் சில நாடுகளில் மட்டுமே இவை கிடைக்கின்றன.

அந்த வகையில் உலகிலேயே அரிய வகை கனிமங்கள் நிறைந்த நாடு சிலி. கூடிய விரைவில் சிலிக்கும் இந்தியாவுக்கும் கையெழுத்தாக இருக்கக் கூடிய ஒப்பந்தத்தின்படி இந்தியா நேரடியாக சிலியில் இருக்கக்கூடிய அரிய வகை கனிமங்களை எடுத்து பயன்படுத்துவதற்கான உரிமத்தை பெற இருக்கிறது. வர்த்தகம் என்பதை தாண்டி அந்த நாட்டின் கனிமங்களை எடுத்து பயன்படுத்தக்கூடிய மிக முக்கியமான ஒரு உரிமம் இந்தியாவிற்கும் இந்தியாவை சேர்ந்த நிறுவனங்களுக்கும் கிடைக்கப் போகிறது.

உலக அளவில் லித்தியம் இருப்புகளில் சுமார் 30 சதவீதம் சிலி நாட்டில் தான் இருக்கிறது. கிட்டத்தட்ட 9. 3 மில்லியன் மெட்ரிக் டன்கள் . அப்படி பார்த்தால் இந்த பூமியிலேயே அதிக அளவில் லித்தியம் இருப்பு வைத்திருக்கக்கூடிய நாடு சிலி தான். அதுவும் மிகச்சிறந்த வகையிலான லித்தியம் என சிலியில் கிடைக்கக்கூடிய லித்தியத்தை வகைப்படுத்துகிறார்கள். இது மட்டுமல்ல உலக அளவில் இருக்கக்கூடிய செம்பில் 24 சதவீதம் சிலியில் தான் இருக்கிறது. அந்த வகையில் உலகின் மிகப்பெரிய செம்பு உற்பத்தி யாளர் சிலி. தற்போது அரியவகை கனிமங்கள் உற்பத்தியில் சீனா தான் 90 சதவீத கட்டுப்பாட்டை வைத்திருக்கிறது. இந்தியா தற்போது மின்சார வாகனம் ,பேட்டரி ,சூரிய ஒளி மின் உற்பத்தி ,விண்வெளி தொழில்நுட்பம் என வேகமாக வளர்ந்து வரக்கூடிய துறைகளில் உற்பத்தியை ஊக்குவித்து வருகிறது. இதற்கு மிக முக்கியமாக தேவைப்படுவது இந்த அரிய வகை கனிமங்கள். இவற்றிற்காக நாம் சீனாவை சார்ந்திருக்க வேண்டி இருக்கிறது.

ஆனால் சிலியுடன் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், நமக்கு நேரடியாக அந்த நாட்டின் கனிமங்களை அணுகும் வாய்ப்பும் எடுத்து தொழில் புரியும் வாய்ப்பும் கிடைக்கும். இது கிடைத்தால் சர்வதேச சந்தையில் சீனாவின் ஆதிக்கத்தை இந்தியா உடைக்க முடியும். அதே வேளையில் இந்தியாவில் இது மிகப்பெரிய உற்பத்தி மற்றும் தொழில் வாய்ப்புகளையும் உண்டாக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

# “மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி “: முதல்வர்!



சென்னை, பிப். 18–

மத்திய மாநில உறவு குறித்து ஆய்வு செய்த உயர்நிலை குழுவின் அறிக்கையை முதல்வர் ஸ்டாலின் இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.. அப்போது உரையாற்றிய அவர் “ மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கொள்கையை திமுக ஏற்றுள்ளது. மத்திய மாநில அரசின் உறவு குறித்த அறிக்கையை சட்டமன்றத்தில் வைக்க இருக்கிறோம்.. நிதி உரிமைக்காக இன்னனும் போராட வேண்டிய நிலை தான் உள்ளது. அனைத்து அதிகாரங்களையும் தன் வசம் மத்திய அரசு வைத்து ள்ளது. அனைத்து அதிகா ரங்களை வைத்து கொண்டு ஏதேச்சதிகாரமாக செயல்ப டுகிறது மத்திய அரசு.. அனைத்து மாநிலங்களும் சுயாட்சியை பெற்றிருக்க வேண்டும்.. மாநில அரசின் முக்கிய ஆதாரங்களை கூட அடுத்தடுத்து ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றும் வேலையை மத்திய அரசு வேகமாக செய்து வருகிறது.. மாநிலங்களுக்கு பகிரப்ப டும் நிதியானது குறைவாக பகிரப்படுகிறது.. இந்த இக்கட்டான சூழலில், ஒன்றியத்தில் கூட்டாட்சி மலர வேண்டும், மாநில சுயாட்சி அமைய வேண்டும்.. இத்தகையை தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தை நாம் மாற்ற வேண்டும்.. கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசியலமைப்பு சட்டம் திருத்தப்பட்டுள்ளது.. நாம் முயன்றால் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை திருத்த முடியும்.. கூட்டாட்சி தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தை மாற்ற வேண்டும். இந்தி திணிப்பு, தொகுதி மறுவரையறை, ஜிஎஸ்டி போன்றவற்றால் தமிழகம் சந்தித்து வரும் நெருக்கடிகளில் இருந்து மீள ஒரே மருந்து மாநில சுயாட்சி தான்.. அதனை அரசியலமைப்பு சட்டம் மூலம் மட்டுமே செய்ய முடியும்.. ஒன்றிய அரசும் மாநிலங்களும் போட்டியாளர்கள் அல்ல.. மாநிலங்கள் வளர்ந்தால் தான் நாடு வளரும் என்பதை மத்திய அரசுக்கு உணர்த்துவோம்.. ஒன்றிய மாநில உறவுகளை சம அளவில் மீட்டெடுக்க வேண்டும்.. நாம் தான் இதை செய்ய வேண்டும்.. நம்மை விட்டால் இதை செய்ய யாரும் இல்லை.. இது வரலாறு நமக்கு வழங்கி இருக்கும் வாய்ப்பு. வளர்க மாநில சுயாட்சி. உருவாகட்டும் இந்திய குடியாட்சி..’’ என்று தெரிவித்தார்.

## த தலையங்கம்

மதுரை மணி

புதன்கிழமை 18.02.2026

விசுவாவசு தமிழ் வருடம்

மாசி மாதம் 06-ம் தேதி

## "விளம்பரத்தை பார்த்து ஏமாறாதீங்க"..!!




இன்றைய நவீன உலகில், மனிதர்களின் ஆறாவது விரலாகவே ஸ்மார்ட்போன்கள் மாறிவிட்டன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரது கைகளிலும் தவழும் இந்த மின்னணு சாதனம், ஒரு அத்தியாவசியத் தேவையாக உருவெடுத்துள்ளது. ஆனால், ஒரு புதிய போனை வாங்கும் விஷயத்தில் நம்மில் பலரும் செய்யும் பொதுவான தவறு என்னவென்றால், சந்தையில் எது பிரபலமாக இருக்கிறதோ அல்லது எது புதிதாக அறிமுகமாகிறதோ அதை உடனே வாங்கிவிடுவதுதான். கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பிப் பணத்தை விரயம் செய்யாமல், நமது உண்மையான தேவை என்ன என்பதை உணர்ந்து போனை தேர்ந்தெடுப்பதே புத்திசாலித்தனமான முதலீடாக அமையும்.

உதாரணமாக, உங்களுக்கு அழைப்புகளை மேற்கொள்வதற்கும் (Phone calls), இணையத்தில் தகவல்களை தேடுவதற்கும் (Browsing) மட்டுமே ஒரு போன் தேவை என்றால், சந்தையில் கிடைக்கும் பட்ஜெட் ரக ஸ்மார்ட்போன்களே போதுமானவை. இதற்காக லட்சக்கணக்கில் செலவு செய்து உயர் ரக மாடல்களை வாங்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, நீங்கள் ஒரு தீவிரமான கேமிங் பிரியராகவோ அல்லது தரமான புகைப்படங்களை எடுக்க விரும்பும் புகைப்படக் கலைஞராகவோ இருந்தால் மட்டுமே, அதற்குரிய பிராசஸர் மற்றும் கேமரா வசதிகள் கொண்ட விலையுயர்ந்த மாடல்களை தேர்ந்தெடுக்க வேண்டும். அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு நீண்ட நேரம் உழைக்கும் பேட்டரி வசதி கொண்ட போன்களே சரியான தேர்வாகும்.

பொதுவாக ஒரு ஸ்மார்ட்போனின் சராசரி ஆயுட்காலம் என்பது 3 முதல் 5 ஆண்டுகள் வரை மட்டுமே. நாம் எவ்வளவுதான் விலை கொடுத்து வாங்கினாலும், அடுத்த ஒரு சில ஆண்டுகளிலேயே அதன் சந்தை மதிப்பு அதலபாதாளத்திற்கு சென்றுவிடும். உதாரணமாக, இன்று நீங்கள் 60,000 ரூபாய்க்கு வாங்கும் ஒரு போன், 5 ஆண்டுகளுக்குப் பிறகு வெறும் 10,000 ரூபாய்க்கு கூட போகாது. எப்படியும் சில ஆண்டுகளில் போனை மாற்றப்போகிறோம் என்ற எதார்த்தத்தை உணர்ந்து, தேவையற்ற ஆடம்பரத்தை தவிர்த்துவிட்டு உங்களது பட்ஜெட்டிற்குள் அடங்கும் சிறந்த போனை தேர்ந்தெடுப்பதே சிறந்தது. தொழில்நுட்பத்தை பின்பற்றுவதை விட, உங்களது பயன்பாட்டிற்கு எது பொருந்தும் என்பதில் கவனம் செலுத்துங்கள்.

# நேஷனல் இன்ஃபர்மேட்டிக்ஸ் சென்டர் மேக்ராஜ் 2.0 AWS & Yotta இணைந்து ஹைப்ரிட் கிளவுட் வழங்கல்!




சென்னை . பிப். 18–

அமேசான் வெப் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (AWS இந்தியா) இன்று யோட்டா டேட்டா சர்வீசஸ் நிறுவனத்துடன் இணைந்து, நேஷனல் இன்ஃபர்மேட்டிக்ஸ் சென்டர் (NIC) உருவாக்கிய மேக்ராஜ் 2.0 திட்டத்திற்காக AWS அவுட்போஸ்ட்ஸ் கட்டமைப்பை வழங்கும் என்று அறிவித்துள்ளது. இதன் மூலம் அரசுத் துறைகள் தங்களின் முக்கிய மான பணிகளை NIC டேட்டா சென்டர்களில் பாதுகாப்பாகச் செய்துகொள்ள, AWS சேவைகள் மற்றும் ஜெனரேட்டிவ் AI போன்ற நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தலாம்.

AWS அவுட்போஸ்ட்ஸ் மூலம், NIC டேட்டா சென்டர்களில் இயங்கும் அப்ளிகேஷன்கள் Amazon EKS, Amazon RDS, Amazon S3 போன்ற மேனேஜ்டு சேவைகள் மற்றும் AWS நைட்ரோ சிஸ்டத்தின் மேம்பட்ட பாதுகாப்பு அம்ச ங்களை பெற முடியும். இது ஹைப்ரிட் ஆர்க்கிடெக்சர் வசதியை உருவாக்கி, உள்ளூர் தரவு பாதுகாப்பு, தரவு ரெசிடென்சி தேவைகள் மற்றும் அதிக பயனர் தேவைகளை தடையின்றி நிறைவேற்ற உதவுகிறது. AWS இந்தியா மற்றும் தெற்காசியப் பிரிவின் தலைவர் சந்தீப் தத்தா மற்றும் யோட்டா டேட்டா சர்வீசஸ் சிஈஓ சுனில் குப்தா தெரிவித்தபடி, இந்த கூட்டணி இந்திய அரசின் டிஜிட்டல் மயமாக்கல் கனவிற்கு உதவும், அதிநவீன கிளவுட் சேவைகள் மற்றும் AI வசதிகளை ஒருங்கிணைத்து, அரசுத் துறைகளுக்கு விரைவான, பாதுகாப்பான மற்றும் வலிமையான ஹைப்ரிட் கட்டமைப்பை வழங்கும் என்பதை உறுதி செய்கிறது.

# "ரமலான் 2026 துபாய்: மறக்க முடியாத இஃப்தார் அனுபவங்களுக்கு உங்கள் முழுமையான வழிகாட்டி!



சென்னை, பிப். 18–

19 பிப்ரவரி முதல் 19 மார்ச் 2026 வரை நடைபெறும் ரமலான் மாதத்தில் துபாய் நகரம் ஆன்மீகத்துடன், பாரம்பரியத்துடன் ஒளிர்கிறது. பகல் நேரம் அமைதியாக இருக்கும் நிலையில், மாலை நேரங்களில் இஃப்தார் விருந்தில், விளக்குகள் மற்றும் சமூக ஒற்றுமை உணர்வு நகரத்தை உயிர்ப்பூட்டுகின்றன. குறிப்பாக இந்திய பயணிகளுக்கு, விருந்தோம்பல் மற்றும் கூட்டு உணவு பகிர்வு போன்ற பாரம்பரிய மதிப்புகள் இந்த அனுபவத்தை நெருக்கமாக உணரச் செய்கிறது.

அட்லாண்டிஸ் தி பாம்– யில் நடைபெறும் அசதீர் கூடாரம் இஃப்தார், ரமலான் காலண்டர் முக்கிய இடம் பெறுகிறது. மத்திய கிழக்கு உணவுகள் முதல் இந்திய, ஆசிய மற்றும் சர்வதேச வகைகள் வரை பரந்த அளவிலான பஃபெ வசதி இங்கு உள்ளது. அதேபோல் அர்மானி ஹோட்டல் துபாய்–யில் உள்ள அர்மானி/பெவிலியன், புர்ஜ் கலீஃபா பின்னணியில் நவீனமும் அமைதியானதும் ஆன இஃப்தார் அனுபவத்தை வழங்குகிறது. பாரம்பரிய பாலைவன சூழலில் இஃப்தார் அனு பவிக்க விரும்புவோருக்கு பாப் அல் ஷம்ஸ் பாலைவன ரிசார்ட் –யில் உள்ள அல் ஹதீஸ் சிறந்த தேர்வாகும். பெடுவின் மரபை பிரதிப லிக்கும் அலங்காரத்துடன், நேரடி சமையல் நிலையங்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெறுகின்றன. மேலும் மதீனாட் ஜுமேரா–இல் உள்ள அல் மஜ்லிஸ் மற்றும் பலாஸ்ஸோ வெர்சேஸ் துபாய்–இல் உள்ள ஜியார்டானோ போன்ற இடங்கள் பாரம்பரியமும் ஆடம்பரமும் இணைந்த இஃப்தார் அனுபவங்களை வழங்குகின்றன. "ரமலான் காலத்தில் துபாய் நகரம் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் உலகத் தரமான விருந்தோம்பலை ஒருங்கிணைக்கும் ஒரு தனித்துவமான அனு பவத்தை வழங்குகிறது," என்று துபாய் சுற்றுலா துறை பிரதிநிதி ஒருவர் தெரிவி த்தார். "2026 ரமலான், நகர த்தின் உணவியல் மற்றும் கலாச்சார செழுமையை அனுபவிக்க சிறந்த காலமாக இருக்கும்" என்றும் அவர் கூறினார்.

# ஜீப்® இந்தியா மெரிடியன் டிராக் சிறப்பு பதிப்பு அறிமுகம் மிக உயர்ந்த வசதி மற்றும் பிரீமியம் அனுபவம்!


சென்னை, பிப். 18–

ஜீப்® இந்தியா நிறுவனம் இன்று மெரிடியன் டிராக் பதிப்பை அறிமுகப்படுத்தியது. மெரிடியனின் பிரீமியம் தன்மையை மேலும் வலுப்படுத்தும் இந்த சிறப்பு பதிப்பு, தனித்துவமான வெளிப்புற வடிவமைப்பு, மேம்படுத்தப்பட்ட கேபின் வசதி மற்றும் ஜீப் நம்பிக்கை 7 உறுதிப்பாட்டுடன் வருகிறது. புதிய 140 மிமீ ஸ்லைடிங் இரண்டாம் வரிசை இருக்கை இதுவரை வெளியான மெரிடியன்கள் மிகவும் வசதியான அனுபவத்தை வழங்குகிறது.

டிராக் பதிப்பின் பிரத்யேக அம்சங்களில் பியானோ பிளாக் மோல்டிங், 18–அங்குல வைர வெட்டு சக்கரங்கள், சிக்னேச்சர் ஹூட் டேகால் மற்றும் டிராக் பதிப்பு சின்னம் உள்ளது. உட்புறத்தில் டார்க் எஸ்பிரெசோ மற்றும் ஸ்பிரஸ் பேஜ் ஃபினிஷ், டுபெளோ தையல், குவில்டிங் வேலைப்பாடுகள் மற்றும் கோர்ட் லெதர் ஸ்டீயரிங் வீல் ஆகியவை கவர்ச்சிகரமாக உள்ளது.

செயல்திறன் மெரிடியன் டிராக் பதிப்பு 2.0L MultiJet® II டீசல் எஞ்சின் (170 HP, 350 Nm) மற்றும் 9–ஸ்பீடு ஆட்டோமேட்டிக் டிரான்ஸ்மிஷன் உடன் 2WD மற்றும் 4WD விருப்பங்களை வழங்குகிறது. வாடிக்கையாளர்களுக்கு wireless Apple CarPlay®, Android Auto™, 10.1–inch Uconnect® 5, 10.25–inch டிஜிட்டல் இன்ஸ்ட்ருமென்ட் கிளஸ்டர், பிரீமியம் ஆல்பைன் ஆடியோ மற்றும் நிலை 2 ADAS போன்ற அம்சங்கள் கிடைக்கின்றன. ஸ்டெல்லாண்டிஸ் இந்தியா, ஆட்டோமோட்டிவ் பிராண்டுகளின் வணிகத் தலைவர் மற்றும் இயக்குனர் திரு. குமார் பிரியேஷ் கூறினார்: "மெரிடியன் டிராக் பதிப்பு வாடிக்கையாளர்களுக்காக மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் மிகவும் பிரீமியம் அனுபவத்தை வழங்குகிறது." விலை: மெரிடியன் டிராக் AT ₹35,95,000*, மெரிடியன் டிராக் AT 4X4 ₹37,82,000*

# "பாவம் போக்கும் மாசி மகம்"..!!





தமிழகத்தின் ஆன்மீக மரபில் நீர் நிலைகளுக்கும், வழிபாட்டிற்கும் உள்ள பிரிக்க முடியாத பிணைப்பை பறைசாற்றும் உன்னதமான திருவிழா 'மாசி மகம்'. ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத்தில் வரும் மகம் நட்சத்திரமும், பௌர்ணமி திதியும் இணையும் நன்னாளில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. ஆறுகள், ஏரிகள் மற்றும் கடற்கரைகள் என அனைத்து நீர் நிலைகளிலும் தெய்வீக ஆற்றல் பெருகி காணப்படும் நாளாக கருதப்படும் இந்நாளில், பெரும்பாலான ஆலயங்களில் உள்ள உற்சவ மூர்த்திகள் நீர் நிலைகளுக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு 'தீர்த்தவாரி' உற்சவம் கண்டருளுவது கண்கொள்ளா காட்சியாக இருக்கும்.

தெய்வங்களே தங்களின் ஆற்றலைப் புதுப்பித்துக் கொள்ளும் நாளாக இது போற்றப்படுவதால், இந்நாளில் பக்தர்களும் புனித நீராடினால் கர்மவினைகள் நீங்கி, செல்வமும் ஆரோக்கியமும் பெருகும் என்பது ஐதீகம். முப்பத்து முக்கோடி தேவர்களும் பூலோகத்திற்கு வந்து பக்தர்களை ஆசீர்வதிப்பதாக நம்பப்படும் மாசி மகம், புதிய முயற்சிகளை தொடங்க மிக உகந்த நாளாகும். குறிப்பாக, புதிய தொழில் தொடங்குதல், முதலீடுகள் செய்தல் அல்லது முக்கிய முடிவுகளை எடுத்தல் போன்ற காரியங்களைச் செய்யும்போது தெய்வீக அருளால் அது பன்மடங்கு வெற்றியைத் தரும் என்பது நம்பிக்கை.

இந்த ஆண்டு மார்ச் 2–ம் தேதி திங்கட்கிழமை மாசி மகம் கொண்டாடப்படுகிறது. மகம் நட்சத்திரம் மார்ச் 2–ம் தேதி காலை 8:17 மணி முதல் மார்ச் 3–ம் தேதி காலை 8:07 மணி வரை உள்ளதாலும், பௌர்ணமி திதி மார்ச் 2–ம் தேதி மாலை 6:29 மணிக்குத் தொடங்குவதாலும், நட்சத்திர அடிப்படையிலேயே மார்ச் 2–ம் தேதியை மாசி மக திருநாளாக கொள்ள வேண்டும் என ஆன்மீக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆன்மீக ரீதியாக மட்டுமின்றி, பித்ருக்களின் ஆசி பெறுவதற்கும் இந்நாள் மிக முக்கியமானது. முன்னோர்களுக்கு தர்ப்பணம் அளித்து வழிபடுவது குடும்பத்தில் அமைதியையும் சுபிட்சத்தையும் நிலைநாட்டும். புராணங்களின்படி, அம்பிகை பார்வதி தேவி தட்சனின் மகளாக அவதரித்ததும் இந்த மாசி மகத் திருநாளில்தான். எனவே, இந்நாளில் தேவி வழிபாடும், குறிப்பாக கும்பகோணம் மகாமகம் குளம் போன்ற புனித தீர்த்தங்களில் நீராடுவதும் அனைத்துப் பாவங்களில் இருந்தும் விடுதலையும், பிறப்பு–இறப்பு சுழற்சியிலிருந்து மோட்சத்தையும் வழங்கும் என நம்பப்படுகிறது. நாகப்பட்டினம், கடலூர், கன்னியாகுமரி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் கடல் அலையின் ஓசைக்கிடையே தெய்வங்களின் தீர்த்தவாரி உற்சவம் வெகு விமர்சையாக நடைபெறும் என்பது கூடுதல் சிறப்பு.

# செல்லப்பிராணி நேசிக்கிற தினம்: Dyson வழங்கும் புத்திசாலித்தனமான பராமரிப்பு வழிகள்!



சென்னை, பிப். 18–

செல்லப்பிராணி நேசிக்கிற தினத்தை முன்னிட்டு, செல்லப்பிராணிகளுக்கு அன்பை வெளிப்படுத்துவது வெறும் அரவணைப்புகள் மற்றும் பலகாரங்களால் மட்டும் போடக்கூடாது என நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். சமூகமயமாக்கல், சீர்ப்படுத்தல், தூய்மையான ஓய்வு இடங்கள் மற்றும் சீரான பயிற்சி போன்ற எளிய ஆனால் தொடர்ந்து செய்யப்படும் பழக்கங்கள், செல்லப்பிராணிகள் உடல் மற்றும் மன நலத்திற்கு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது.

"அன்பு என்பது வெறும் பாசம் காட்டுவது அல்ல; அது பொறுப்பான மற்றும் சீரான பராமரிப்பு வெளிப்பட வேண்டும்," என்று கோல்டன் கிரே நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் சான்றளிக்கப்பட்ட நாய் பயிற்சியாளர் நித்திகா அகலாவத் தெரிவித்தார். நாய்கள் சமூக வகுப்புகள் மற்றும் வெளிப்புற நடைப்பயணங்களுக்கு அழைத்துச் செல்வது அவற்றின் தன்னம்பிக்கையை உயர்த்தும் என்று, சீரான முடி சீவுதல் ஒவ்வாமைத் தொந்தரவுகளை குறைக்கும் என்றும் அவர் கூறினார். Dyson Pet Groom tool போன்ற கருவிகள் உதிர்ந்த முடி மற்றும் பொடுகை நேரடியாக சேகரிப்பதால் வீடு தூய்மையாக இருக்க உதவுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், செல்லப்பிராணிகள் படுக்கைகளை முறையாக சுத்தம் செய்தல், நடை பயணத்திற்கு பிறகு பாதங்களை சரிபார்த்தல் மற்றும் புத்திசாலித்தனமாக பலகாரங்கள் பயன்படுத்துதல் முக்கியம் என நித்திகா அகலாவத் வலியுறுத்தினார். "சிறிய விஷயங்களை தொடர்ந்து கவனமாகச் செய்யவும், செல்லப் பிராணிகள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வளரும். அதுவே உண்மையான அன்பின் வெளிப்பாடு," என்று அவர் தெரிவித்தார்.

# ASME பொறியியல் கல்வி கருத்தரங்கு: REVA University-யில் ட்ரோன் தொழில்நுட்ப திறன்கள் முன்னிலைப்படுத்தல்!




சென்னை, பிப். 18–

மெக்கானிக்கல் இன்ஜினியரிங் எஜுகேஷன் சமிட்டின் (MEEd) ஒரு பகுதியாக, ASME Foundation India ஏற்பாட்டில் ட்ரோன் தொழில்நுட்பம் குறித்த பொறியியல் கல்வி கருத்தரங்கம் REVA University–யில் நடைபெற்றது. வகுப்பறைக் கற்றலுக்கும் தொழில்துறை தேவைகளுக்கும் இடையிலான இடைவெளி குறைப்பதே இதன் நோக்கமாகும். பாதுகாப்பு, விவசாயம், தளவாடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு துறையில் ட்ரோன் பயன்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில், பன்முகத் திறன்கள் உடன் கூடிய பொறியாளர்கள் தேவைப்படுவதை கருத்தரங்கு வலியுறுத்தியது. "எம்இஇடி மற்றும் ஐஎம்இசிஇ போன்ற தளங்கள், எதிர்காலத்திற்கு தயாரான பொறியாளர்களை உருவாக்க கல்வி மற்றும் தொழில்துறை ஒன்றிணைகின்றன," என்று Madhukar Sharma, ASME India Private Limited தலைவர் மற்றும் இயக்குனர் தெரிவித்தார். உலகளாவிய பொறியியல் சமூகமாக ஏஎஸ்எம்இ பொறுப்பான கண்டுபிடிப்புகளை முன்னெடுக்கிறது என்றும், இந்தியாவின் வளர்ந்து வரும் பங்களிப்பை இது பிரதிபலிக்கிறது என்று அவர் கூறினார்.

"பொறியியல் கல்வி நிஜ உலகத் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்," என்று Avani Malhotra, ASME Foundation India துணை இயக்குனர் குறிப்பிட்டார். தொழில்துறை அனுபவம் மாணவர்களுக்கு அவசியம் என்றும், பிரச்சினை தீர்க்கும் திறன் மற்றும் தகவமைப்பு திறன் போன்ற திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் Dr. K.S. Narayanaswamy, REVA University இணைத் துணைவேந்தர் வலியுறுத்தினார். இந்த கருத்தரங்கு, ட்ரோன் மற்றும் ஏரோஸ்பேஸ் துறையில் தொழில் துறையின் இணைந்து கற்றலின் முக்கியத்துவம் மீண்டும் உறுதிப்படுத்தியது.

# சைக்கிள் சுற்றுலாவில் சபா முன்னிலை: 'Sabah Cycling Paradise' மலேசியா டூரிசம் மூலம் சென்னை புதிய முயற்சி!

சென்னை . பிப். 18–


டூரிசம் மலேசியா சென்னை, சபா சுற்றுலா வாரியத்துடன் இணைந்து, ராயல் புருணை ஏர்லைன்ஸ் மற்றும் Trek Finder Tours ஆதரவுடன், 24 முதல் 29 ஜனவரி 2026 வரை "Sabah Cycling Paradise" எனும் சைக்கிள் மையப்படுத்திய FAM பயணத்தை வெற்றிகரமாக நடத்தியது. இந்தியாவில் இருந்து சபாவுக்கு நடத்தப்பட்ட முதல் சைக்கிள் சுற்றுலா அறிமுக நிகழ்வு இது அமைந்தது.







சென்னையைச் சேர்ந்த சைக்கிள் ஆர்வலர்கள் இந்த 6 நாள் பயணத்தில் கோட்டா கினபாலு, கோட்டா பெல்ட், கோட்டா மருடு, குட், குண்டா சாங் மற்றும் தாம்பருலி போன்ற இடங்களில் கடற்கரை, மலைப்பகுதி மற்றும் பண்பாட்டு நகரங்கள் வழியாக சைக்கிள் சவாரி செய்து சபாவின் இயற்கை அழகை அனுபவித்தனர்.

இந்த பயணத்தை சபா சுற்றுலா வாரிய தலைமை நிர்வாக அதிகாரி ஜூலியஸ் ஜெஃப்ரி ஜிமிட் துவக்கி வைத்தார். டூரிசம் மலேசியா சென்னை இயக்குநர் ஹிஷாமுத்தீன் முஸ்தபா, சைக்கிள் மற்றும் அனுபவம் சார்ந்த சுற்றுலா மூலம் உயர்தர பயணிகளை ஈர்க்கும் திட்டமாக இதை விளக்கினார். Visit Malaysia Year 2026 மற்றும் Visit Sabah 2027 முன்னெடுப்புகள் உடன் இணைந்து, சபாவை சைக்கிள் மற்றும் ஈகோ சுற்றுலா மையமாக இந்திய சந்தையில் முன்னிறுத்த டூரிசம் மலேசியா சென்னை தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. "Sabah Cycling Paradise Ride the Beauty of Borneo" என்ற வாசகத்துடன், சபா உலக சுற்றுலா பயணிகளை வரவேற்கிறது.



## சினிமா துளிகள்..!

### நடிகை பிரதியுஷா மரண வழக்கு.. 24 ஆண்டுகளுக்கு பின் உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு..!



2000களின் தொடக்கத்தில் தமிழ், தெலுங்கு சினிமாவில் வளர்ந்து வரும் நடிகையாக இருந்தவர் பிரதியுஷா.. அவர் விஜயகாந்துடன் தவசி, முரளி உடன் மனுநீதி ராமராஜனுடன் பொன்னான நேரம், பாரதிராஜாவின் கடல் பூக்கள் ஆகிய படங்களில் நடித்து பிரபலமானார்.. நடிகை பிரதியுஷாவும் சித்தார்த் ரெட்டி என்பவரும் காதலித்து வந்துள்ளனர்.. ஆனால் இவர்களின் காதலுக்கு சித்தார்த் குடும்பம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது..

இதனால் கடந்த 2002–ம் ஆண்டு பூச்சிக் கொல்லி மருந்தை குடித்து இருவரும் தற்கொலைக்கு முயன்றனர்.. இதில் சித்தார்த் உயிர் தப்பிய நிலையில் பிரதியுஷா உயிரிழந்தார்.. இருவரும் குளிர்பானங்களில் பூச்சிக்கொல்லி மருந்து கலந்து குடித்தனர் விசாரணையில் தெரியவந்தது.

சித்தார்த் ரெட்டி மீது பிரிவுகள் 306 (தற்கொலைக்குத் தூண்டுதல்) மற்றும் பிரிவுகள் 309 (தற்கொலைக்கு முயற்சி) ஆகியவற்றின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பிப்ரவரி 23, 2004 அன்று பெருநகர அமர்வு நீதிபதி அவருக்கு ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் ரூ. 5,000 அபராதம் விதித்தார். பின்னர் அவர் உயர் நீதிமன்றத்தை அணுகினார், அது டிசம்பர் 28, 2011 அன்று தீர்ப்பளித்தது, சிறைத் தண்டனையை இரண்டு ஆண்டுகளாகக் குறைத்து, அபராதத்தை ரூ. 50,000 ஆக உயர்த்தியது. பிரதியுஷாவின் தாயார் 2012 இல் உச்ச நீதிமன்றத்தை அணுகினார்.

இந்த நிலையில் நடிகை பிரதியுஷா மரண வழக்கில் 24 ஆண்டுக்கு பின் உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கி உள்ளது. இந்த வழக்கில் காதலன் சித்தார்த் ரெட்டிக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது. சிறை தண்டனைக்கு எதிரான சித்தார்த் ரெட்டியின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்த நீதிமன்றம் 4 வாரங்களில் அவர் சரணடையௌம் உத்தரவிட்டுள்ளது. உயர் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செய்த உச்ச நீதிமன்றம், சித்தார்த் ரெட்டி நான்கு வாரங்களுக்குள் சரணடைய வேண்டும் என்று தெளிவுபடுத்தியுள்ளது.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இப்படி தேநீர் குடித்தால் கல்லீரல் கண்டிப்பாக பாதிக்கப்படும்..! இந்த தவறுகளை செய்யாதீங்க..!



பலர் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு கப் தேநீர் அருந்துகிறார்கள். மனதைப் புத்துணர்ச்சியடையச் செய்ய இந்த உற்சாகமான பானத்தை காலையிலும் மாலையிலும் குடிப்பது வழக்கம். இருப்பினும், தேநீர் தயாரிக்கப்பட்டு குடிக்கும் விதம் சில நேரங்களில் உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதில் உள்ள காஃபின் குறைந்த அளவில் உடலைச் சென்றடைந்தால் நல்லது. ஆனால் நீங்கள் அதிகமாக தேநீர் குடித்தால், இந்த கலவை குடல் ஆரோக்கியத்தையும் கல்லீரலையும் சேதப்படுத்தும். அதனால்தான் தேநீர் குடிக்கும்போது அனைவரும் செய்யும் பொதுவான தவறுகள் மற்றும் அவற்றை எவ்வாறு சரிசெய்வது என்று பார்க்கலாம்..

**மிகவும் சூடான தேநீர் குடிப்பது :**

பலர் மிகவும் சூடாக இருக்கும்போது தேநீர் குடிப்பார்கள். ஆனால் இது மிகவும் ஆபத்தானது. தேநீர் அல்லது 65° C க்கு மேல் வெப்பமான வேறு எந்த பானத்தையும் குடிக்க வேண்டாம். இது உணவுக்குழாய் புற்றுநோயை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த அதிக வெப்பமான பானங்கள் உணவுக்குழாயின் உள் புறணியை சேதப்படுத்தி புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கின்றன. அதனால்தான் தேநீரை கோப்பையில் ஊற்றிய பிறகு குறைந்தது 4–5 நிமிடங்கள் காத்திருந்து அது வெதுவெதுப்பான பிறகு குடிப்பது நல்லது.

**வெறும் வயிற்றில் தேநீர் குடிப்பது:**

வெறும் வயிற்றில் தேநீர் குடிப்பது நல்லதல்ல. இது வயிற்றின் புறணியை சேதப்படுத்தி, அமிலத்தன்மை மற்றும் அமில ரிஃப்ளக்ஸ் போன்ற பிரச்சனைகளின் அபாயத்தை அதிகரிக்கும். வெறும் வயிற்றில் தேநீர் குடித்தால், அதில் உள்ள டானின்கள் வயிற்றில் அமில உற்பத்தியைத் தூண்டும். இது வயிற்றில் எரிச்சல் மற்றும் நெஞ்செரிச்சலை ஏற்படுத்தும். எனவே, காலையில் தேநீர் குடிக்க விரும்பினால், முதலில் குறைந்தது ஒரு கிளாஸ் தண்ணீர் குடிப்பது அல்லது ஒரு பிஸ்கட் அல்லது சிறிது ஊறவைத்த பாதாம் சாப்பிடுவது நல்லது.

**அதிகமாக சர்க்கரை சேர்ப்பது:**

நாம் குடிக்கும் பால் டீயில் நிச்சயமாக சர்க்கரை சேர்க்கிறோம். அதிக சர்க்கரையுடன் தேநீர் குடித்தால், கல்லீரலில் கொழுப்பு சேரும், இது நீரிழிவு நோயின் அபாயத்தையும் அதிகரிக்கிறது. தேநீரில் உள்ள சர்க்கரை கல்லீரலில் ட்ரைகிளிசரைடுகள் வடிவில் சேமிக்கப்படுகிறது. கொழுப்பு நிறைந்த கல்லீரலுக்கு இதுவே முக்கிய காரணம்.

**இரவில் தேநீர் குடிப்பது :**

இரவில் தேநீர் குடிப்பது அதில் உள்ள காஃபின் காரணமாக தூங்குவதை கடினமாக்கும். தூக்கப் பழக்கமும் கல்லீரல் ஆரோக்கியத்தை சேதப்படுத்தும். மூளையில் தூக்கத்தைத் தூண்டும் வேதிப்பொருளான அடினோசினை காஃபின் தடுக்கிறது. தூக்கம் இல்லாதபோது, கல்லீரல் தன்னைத்தானே சரிசெய்ய நேரம் கிடைக்காது, இது வளர்சிதை மாற்றத்தை சேதப்படுத்துகிறது. அதனால்தான் மாலைக்குப் பிறகு தேநீர் குடிக்கக்கூடாது. இரவில் சூடான பால் அல்லது மூலிகை தேநீர் குடிக்கலாம்.

# நான் வீழ்வேன் என் நினைத்தாயோ? மாணிக்கம் தாகூர்!

சென்னை, பிப். 18–

சென்னை முகப்பேரில் பிப். 17–ல் நடைபெற்ற காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள் கூட்டத்தில் கட்சியின் அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி.வேணு கோபால் கலந்துகொண்டார். இந்தக் கூட்டத்தில், "கூட்டணி குறித்து பொது வெளியில் பேசினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



**வீழ்வேன் என்று நினைத்தாயோ?**

ஆனால், இன்று (பிப். 18) காலை சமூக வலைதளத்தில் மாணிக்கம் தாகூர் எம்.பி., பாரதியார் கவிதையை வெளியிட்டு, அதில் வரும் "வீழ்வேன் என்று நினைத்தாயோ?" என்ற வார்த்தையை கோடிட்டு காட்டியிருந்தார்.

ஏற்கனவே நேற்று "அச்ச மில்லை.. அச்ச மில்லை.." என்று கருத்து பதிவிட்டு இருந்த மாணிக்கம் தாகூர், தொடர்ந்து திமுகவுக்கு எதிரான கருத்துகளை கூறிவருகிறார். தவெகவுடன் கூட்டணி சேரவும் கட்சி தலைமையை வலியுறுத்தி வருகிறார். திமுக தலைமை அதிருப்தி ஆனால், இதுவரை மாணி க்கம் தாகூர் மீது காங்கிரஸ் தலைமை எந்த நடவடிக்கை எடுக்காததால் திமுக தலைமை அதிருப்தியில் உள்ளது. இதனால், 22–ந் தேதி தொடங்கும் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு காங்கிரஸ் கட்சியை அழைக்குமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# சென்னையில் மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல்; கைது செய்த போலீசாருக்கு கண்டனம்!

சென்னை, பிப். 18–

சென்னை கோயம்பேட்டில் உதவித்தொகை உயர்வு கோரி சாலை மறியல் போராட்டம் நடத்தி வரும் மாற்றுத்திறனாளிகளை போலீசார் கைது செய்தனர்.



உதவித் தொகையை 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும். டி.என்.பி.எஸ்.சி., தேர்வில் செவித்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஒரு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். அரசு விழிப்புணர்வு பதாகைகளில், 'சைகை' மொழி குறியீட்டை பயன்படுத்த வேண்டும்' என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். நேற்று இரவு போராட்டம் நடத்திய மாற்றுத்திறனாளிகளை போலீசார் கைது செய்து, பஸ்சில் அழைத்துச்சென்று ஏற்றியும் இறக்கியும் அலைக்கழித்தனர். அவ்வாறு இறக்கி விடும்போது, மாற்றுத்திறனாளிகளை போலீசார் தாக்கியதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.இதில், மார்க்சிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவரான பாலகிருஷ்ணன் மனைவி ஜான்சி ராணி காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தங்கள் கோரிக்கையை ஏற்காத அரசை கண்டித்தும், கைது என்ற பெயரில் தங்களை அலைக்கழிப்பு செய்ததை கண்டித்தும் இன்று மாற்றுத்திறனாளிகள் கோயம்பேட்டில் பிரதான சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்தனர்.

சட்டசபை கூட்டம் நடக்கும் நேரத்தில், மாற்றுத்திறனாளிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது, அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

# கோவையில் 22-ந் தேதி திமுக இளைஞரணி மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

சென்னை, பிப். 18–

திமுக தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

திமுக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதல்–அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில், வருகிற 22.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணி அளவில், கோவை, கருமத்தம்பட்டி, கணியூர் டோல்கேட் அருகில் "மேற்கு மண்டல திமுக இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு" நடைபெற உள்ளது.

இதில் திமுக துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா எம்.பி, அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி. அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், கரூர் மாவட்ட திமுக செயலாளர் வி.செந்தில்பாலாஜி வரவேற்புரையாற்றிட, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா தலைவர் தாட்கோ, ப.அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ். சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி. ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.



மேற்குமண்டலத்தை சேர்ந்த மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி. பேரூர் வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட அந்தந்த மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை 'மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரலாறு படைக்கப் போகும் இந்த 'திமுக இளைஞர் அணி மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அரசக்கரபாணி, டாக்டர் மா.மதிவேந்தன். என். கயல்விழி செல்வராஜ் மாவட்டச்செயலாளர்கள்/ பொறுப்பாளர்களான தொ அரவி, தளபதி முருகேசன், மேயர் என்.தினேஷ்குமார், க.செல்வராஜ், எம்.எல்.ஏ. இலபத்மநாபன், கே.ஈஸ்வரசாமி.எம்.பி. என்.நல்லசிவம். கே.ஆர் என்.இராஜேஷ்குமார். எம்பி, கே.எம்.ராஜு, தோப்பு வெங்கடாசலம், கே.எஸ். மூர்த்தி, துரை செந்தமிழ் செல்வன்; மாநகரச் செயலாளர்களான மு.சுப்பிரமணியம், டிகேடி மு.நாகராசன், ஈதங்கராஜ், எஸ்.பி.கனகராஜ்,

நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களான கண்பதிராஜ்குமார், எம்.பி, கே.ராமச்சந்திரன், எம்.எல்.ஏ, வி.சி.சந்திரகுமார், எம்.எல்.ஏ. ஏ.ஜி.வெங்கடாசலம். எம்.எல்.ஏ. ராஇளங்கோ, எம்.எல்.ஏ. பி.ராமலிங்கம், எம்.எல்.ஏ, திருமதி கே.சிவகாம சுந்தரி எம்.எல்.ஏ. ஆர் மாணிக்கம், எம்.எல்.ஏ.

தென்மண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான சபரிகார்த்திகேயன், எம்.ஏ.ஆர்.கே. ஹக்கீம், இரா.தனபால், மு.ஜெயக்குமார். ஜெதிருவாசகம், ஏ.திருவேங்கடம், சன் சுரேஷ், சி.விஸ்வநாத் ஆர் பாலாஜி வெங்கமேடு சக்திவேல், இமயம் சசிக்குமார், ரமேஷ், யுவராஜ் மாநகர அமைப்பாளர்களான எம்.எஸ்.ஆர் ராஜூ, முத்துக்குமார், கே.டி சேந்த புகழன், கராத்தேபூபதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். திமுக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் நன்றியுரையாற்றுகிறார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மத்திய கிழக்கு பகுதியில் 50 போர் விமானங்களை குவித்த அமெரிக்கா!



அமெரிக்கா, பிப். 18–

மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது ராணுவ இருப்பை மேலும் அதிகரித்து உள்ளது. ஈரானுடனான பதற்றங்களுக்கு மத்தியில் மேற்கு ஆசியாவிற்கு 50–க்கும் மேற்பட்ட போர் விமானங்களை அமெரிக்கா அனுப்பி நிலை நிறுத்தி உள்ளது. எப்–16, எப்–22, எப்–35 போர் விமானங்கள் உள்பட பல விமானங்கள் சென்று உள்ளன. ஈரான் உச்ச தலைவரின் எச்சரிக்கை மற்றும் ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் ராணுவ பயிற்சியை தொடர்ந்து இந்த நடவடிக்கையை அமெரிக்கா எடுத்துள்ளது.

# ஏப்ரல் மாத மத்தியில் தமிழக சட்டசபை தேர்தல்: அடுத்த மாதம் 2-வது வாரம் அறிவிப்பு வெளியாகிறது!

சென்னை, பிப். 18–

தமிழகத்தில் ஆட்சி செய்து வரும் திமுக அரசின் பதவிக்காலம் மே மாதம் 10–ந் தேதியுடன் முடிவடைகிறது. இதேபோல், மேற்கு வங்காளம் (மே 7), அசாம் (மே 20), கேரளா (மே 23), புதுச்சேரி (ஜூன் 15) மாநில சட்டசபைகளின் பதவிக் காலமும் நிறைவடைகிறது. அதற்கு முன்னதாக தமிழகம் உள்ளிட்ட இந்த 5 மாநிலங்களிலும் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளில் இந்திய தேர்தல் ஆணையம் ஈடுபட்டு வருகிறது.




ஒவ்வொரு மாநிலமாக வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெற்ற நிலையில், இறுதி வாக்காளர் பட்டியலும் வெளியிடப்பட்டு வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டில் வரும் 23–ந் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இந்த 5 மாநிலங்களுக்கான தேர்தல் தேதி அடுத்த மாதம் (மார்ச்) 2–வது வாரம் வெளியிடப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, 10–ந் தேதி முதல் 15–ந் தேதிக்குள் தேர்தல் தொடர்பான அறிவிப்பு இந்திய தேர்தல் ஆணையத்திடம் இருந்து வெளியாகும் என கூறப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரியில் ஒரே கட்டமாகவும், அசாம், மேற்கு வங்காளத்தில் பல கட்டங்களாகவும் தேர்தலை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை ஏப்ரல் மாத மத்தியில் சட்டசபை தேர்தல் ஒரே கட்டமாக நடைபெற இருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக, ஏப்ரல் மாதம் 13–ந் தேதி இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால், அதற்கு அடுத்த நாள் (ஏப்ரல் 14) தமிழ் புத்தாண்டு வருவதால், தேர்தல் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களை கருத்தில் கொண்டு, இந்த தேதியிலும் மாற்றம் செய்ய வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

# பேரூராட்சி அலுவலகம், அம்மையநாயக்கனூர்

**ந.க.எண்.27/2026/அ** **நாள்:09.02.2026**

**வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (இரண்டு உறைகள்)**

திண்டுக்கல் மாவட்டம், அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் 2026–27ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி, திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி பணி உத்திரவு வழங்கும் நாள் முதல் 31.03.2027 வரையிலான காலத்திற்கு பொது சுகாதார உபகரணங்கள் சப்ளை செய்தல் மற்றும் குடிநீர் விநியோக பொருட்கள் சப்ளை செய்தல் உள்ளிட்டவைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நிபந்தனைகளுக்குட்பட்டு 23.02.2026 தேதி திங்கள்கிழமையன்று மாலை 3.00 மணி வரை இரண்டு சுவர்கள் முறையில் (Two Cover Systems) வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் பணிவாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23.02.2026 தேதி திங்கள்கிழமை மாலை 3.30மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் பொழுது அதற்குரிய டேவணித் தொகையினை இணைய வழி செலுத்திடவும். மேலும் இதர விபரங்களை அலுவலக நேரங்களில் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் வந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் | டேவணித் தொகை ரூ. | காலம் |
|---|---|---|---|
| 1. | பொது சுகாதார பொருட்கள் சப்ளை செய்தல் | 10000/– | பணி உத்திரவு வழங்கிய நாள் முதல் 31.03.2027 முடிய |
| 2. | குடிநீர் விநியோக பொருட்கள் சப்ளை செய்தல் | 10000/– | பணி உத்திரவு வழங்கிய நாள் முதல் 31.03.2027 முடிய |

**ஒம்/-தலைவர்**
அம்மையநாயக்கனூர் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

**ஒம்/-செயல் அலுவலர்**
அம்மையநாயக்கனூர் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

வெ.ஆ.எண்: 49/2026/ செ.ம.தொ.அ/ திண்டுக்கல்/ நாள்: 17.02.26.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்" "சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## நெவேலி பழுப்பு நிலக்கரி கழக 21 காலியிடங்கள்

Organization Name: NLC India Limited (NLCIL)
Notification No: 20/2024
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 21 Pharmacist Gr.B, Ophthalmic Technician, Theatre Assistant, Audiologist and Speech Therapist, Dental Mechanic Posts
Place of Posting: Neyveli
Starting Date: 09.02.2026
Last Date: 10.03.2026
Apply Mode: Online
Official Website: https://www.nlcindia.in/

## அஹில்யாநகர் கவசப் படை மையம் மற்றும் பள்ளி 12 காலியிடங்கள்

Organization Name: Armoured Corps Centre and School Ahilyanagar
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 12 Group C Posts
Place of Posting: 61 Cavalry, at Jaipur and New Delhi
Starting Date: 07.02.2026
Last Date: 27.02.2026
Apply Mode: Offline
Official Website: https://www.indianarmy.nic.in/

## தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் 52 காலியிடங்கள்

Organization Name: NIMHANS National Institute of Mental Health and Neuro Sciences
Notification No: NIMH/Rect/Group B&C/ ADVT–3/2025–26
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Openings: 52 Group B and C Posts
Place of Posting: Bengaluru
Starting Date: 03.02.2026
Last Date: 04.03.2026
Apply Mode: Online
Official Website: https://www.nimhans.ac.in/

## இந்தியன் வங்கி 12 காலியிடங்கள்

Organization Name: Indian Bank
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 07 Officer JMG Scale–I and Clerks (Sports Person) Posts
Place of Posting: Chennai
Starting Date: 04.02.2026
Last Date: 24.02.2026
Apply Mode: Online
Official Website: https://indianbank.bank.in/

மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் 12காலியிடங்கள்

Organization Name: CSIR CLRI, Central Leather Research Institute
Notification No: 01/2026
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 13 MTS, JSA, Junior Stenographer Posts
Place of Posting: Chennai
Starting Date: 23.01.2026
Last Date: 02.03.2026
Apply Mode: Online
Official Website: https://clri.org/

## வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் 07 காலியிடங்கள்

Organization Name: V.O. Chidambaranar Port Authority
Notification No: GAD–EST10EST–C(EST)/6/2025–GAD(7433)/D 274
Job Category: Central Govt Jobs
Employment Type: Contract Basis
Total No of Vacancies: 07 Finance Senior Consultant, Finance Associate Consultant, Admin Associate Consultant Posts
Place of Posting: Tuticorin
Starting Date: 14.02.2026
Last Date: 16.03.2026
Apply Mode: Offline
Official Website: http://www.vocport.gov.in/

**தூத்துக்குடி துறைமுக கல்வி கழகம்**, துறைமுக மேல்நிலைப்பள்ளி, வ.உ.சி. துறைமுக குடியிருப்பு வளாகம், தூத்துக்குடி, தமிழ்நாடு-628004.

**காலிப்பணியிட அறிவிப்பு** (விளம்பர எண்: 01/2026)

தூத்துக்குடி துறைமுக கல்வி கழகம் கீழ்காணும் நிரந்தர பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பிரிவு (இனச்சுழற்சி அடிப்படையில்) | ஊதிய வீதம் |
|---|---|---|---|---|
| 1. | முதுகலை ஆசிரியர் வேதியியல் | 1 | Scheduled caste (Arunthathiyar on preferential Basis | 36,900 -1,16,600 Level-18 cell-1 |
| | முதுகலை ஆசிரியர் பொருளியல் | 1 | | |
| 2. | முதுகலை ஆசிரியர் வணிகவியல் | 1 | பொதுப்பிரிவு | 36,900 -1,16,600 Level-18 cell-1 |
| | முதுகலை ஆசிரியர் விலங்கியல் | 1 | | |

மேற்காணும் பணியிடங்களுக்கான கல்வித்தகுதி, பணி அனுபவம், பிற விவரங்கள் மற்றும் விண்ணப்பபடிவம் குறித்த தகவல்களை வ.உ.சி. துறைமுக இணையதளமான www.vocport.gov.in-ல் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும். தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, **செயலர், தூத்துக்குடி துறைமுக கல்விக்கழகம், துறைமுக மேல்நிலைப்பள்ளி, வ.உ.சி. - துறைமுக குடியிருப்பு வளாகம், தூத்துக்குடி, தமிழ்நாடு-628004** என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 04.03.2026**

**செயலர்**
(தூத்துக்குடி துறைமுக கல்விக்கழகம்)




திருமுருக எண்ணெய்ப் பலகாரம்
2331731
4377877
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு
மற்றும் வடமாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்

# ராஜ்யசபா தேர்தல் அறிவிப்பு; திமுக, அதிமுகவுக்கு நெருக்கடி!

புதுடெல்லி, பிப். 18–

தமிழகத்தில் காலியாக இருக்கும் 6 ராஜ்யசபா எம்பி பதவிகளுக்கான தேர்தல் மார்ச் 16ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் கூட்டணியில் சேருவதற்கும், இருப்பதற்கும் நெருக்கடி கொடுக்கும் அரசியல் கட்சிகளுக்கு எம்.பி., பதவியிடங்களை பகிர்ந்து கொடுக்க வேண்டிய நெருக்கடி, திமுக மற்றும் அதிமுகவுக்கு ஏற்பட்டுள்ளது.



தமிழக சட்டசபை தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது. இதனால் விரைவில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் விதிகள் அமலுக்கு வந்துவிடும். இந்த சூழலில், தமிழகத்தை சேர்ந்த திமுகவின் திருச்சி சிவா, என்.ஆர்.இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி, என்விஎன் சோமு, அதிமுகவின் தம்பித்துரை, தமாகா.,வின் ஜிகே வாசன் ஆகியோரது ராஜ்யசபா எம்பி பதவி வரும் ஏப்ரல் 2ம் தேதி நிறைவடைகிறது.

இந்நிலையில் 10 மாநிலங்களில், 37 ராஜ்யசபா எம்.பி., பதவியிடங்களுக்கான தேர்தல் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் தமிழக சட்டசபை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் 6 எம்.பி., பதவியிடங்களும் அடங்கும். இந்த தேர்தல் மார்ச் 16ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

* பிப்ரவரி 26ம் தேதி– வேட்பு மனு தாக்கல் தொடக்கம்
* மார்ச் 5ம் தேதி– வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள்.
* மார்ச் 9ம் தேதி– மனுக்கள் வாபஸ் பெற கடைசி நாள்.
* மார்ச் 16ம் தேதி– காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை ஓட்டுப்பதிவு
* மார்ச் 16ம் தேதி– மாலை 5 மணிக்கு ஓட்டு எண்ணிக்கை தொடங்கும்.


தற்போதைய எம்எல்ஏக்கள் அடிப்படையில் திமுகவுக்கு 4 எம்பிக்களும், அதிமுக கூட்டணிக்கு 2 எம்பிக்களும் கிடைக்க வாய்ப்புள்ளது. அதிமுகவுடன் கூட்டணி பேச்சு நடத்தி வரும் தேமுதிகவும் இந்த தேர்தலிலேயே ராஜ்யசபா எம்பி பதவியை எதிர்பார்க்கிறது. அன்புமணி தரப்பும் அதே கோரிக்கையை வைத்துள்ளது. காங்கிரஸ் கட்சியில் சிலர், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திமுகவுக்கு நெருக்கடி ஏற்படுத்துகின்றனர். அவற்றில். ராஜ்யசபா சீட் வேண்டும் என்ற நெருக்கடியும் சேர்ந்தே இருக்கிறது.

சட்டசபை தேர்தல் கூட்டணிகள் இன்னும் முழுமையாக இறுதி செய்யப்படாத நிலையில், திமுக மற்றும் அதிமுகவுக்கு நெருக்கடி ஏற்படுத்துவதாக இந்த ராஜ்யசபா தேர்தல் அமைந்துள்ளது.

# தொடர்ந்து சரிந்து வரும் தங்கம் விலை!

சென்னை, பிப். 18–

சென்னையில் இன்று ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 720 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 840 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது.



கிராமுக்கு 90 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 14,230 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 3 நாட்களில் தங்கம் விலை சவரனுக்கு 2 ஆயிரத்து 640 ரூபாய் குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு 5 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 260 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கிலோவுக்கு 5 ஆயிரம் குறைந்து ஒரு கிலோ 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# தகுதிச்சான்றிதழ் கட்டணம் பல மடங்கு உயர்வு: 25-ம் தேதி நள்ளிரவு முதல் லாரிகள் காலவரையற்ற வேலைநிறுத்தம் அறிவிப்பு...!






நாமக்கல் பிப். 18–

நாமக்கல் அருகே வள்ளிபுரத்தில் மாநில லாரி உரிமையாளர்கள் சம்மேளன செயற்குழு கூட்டம் நேற்று மாநில தலைவர் தனராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த லாரி உரிமையாளர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு தகுதிச்சான்றிதழ் கட்டணத்தை மத்தியஅரசு உயர்த்தியது குறித்து, இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முன்வராதது குறித்தும் விவாதித்தனர்.

பின்னர், செய்தியாளர்களை சந்தித்த மாநில தலைவர் தன்ராஜ், 15 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் உள்ள லாரி மற்றும் பேருந்துகளுக்கு தகுதி சான்றிதழ் புதுப்பிக்க கட்டணம் ரூ.2,500 இருந்து வந்தது. 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சகம் மத்திய மோட்டார் வாகன சட்டத்தின்படி அனைத்து வாகனங்களுக்கும் தகுதி சான்றிதழ் புதுப்பித்தல் கட்டணத்தை உயர்த்தியது.

அதன்படி ,15 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் உள்ள லாரிகள், மினி சரக்கு வாகனங்கள் மற்றும் பேருந்துகளுக்கு தகுதி சான்றிதழ் புதுப்பித்தல் கட்டணம் ரூ.14,500 ஆகவும் 20 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு ரூ.28,200 ஆகவும் நிர்ணயம் செய்து உள்ளது. ஏறத்தாழ 10 மடங்கு வரை தகுதி சான்றிதழ் புதுப்பித்தல் கட்டணம் உயர்ந்து இருப்பதால் லாரி உரிமையாளர்கள் தங்களது வாகனத்தின் தகுதி சான்றிதழை புதுப்பிக்காமல் நிறுத்தி வைத்து வருகின்றனர்.

இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண கோரி தமிழக போக்குவரத்து துறை அமைச்சரை சந்தித்து வலியுறுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏறத்தாழ 10 மடங்கு வரை தகுதி சான்றிதழ் புதுப்பிப்பு கட்டணத்தை உயர்த்தி இருப்பதால் ஒரு லாரி வைத்து தொழில் செய்து வருபவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

தகுதிச்சான்றிதழ் கட்டண உயர்வை ஒன்றிய அரசு அறிவித்தாலும், மாநில அரசு அதனை நிறுத்தி வைக்கலாம். இதனால் தகுதி சான்றிதழ் புதுப்பிக்க முடியாமல் தமிழகம் முழுவதும் சுமார் 1 லட்சம் லாரிகள் இயக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஒரு லாரியை நம்பி 10 குடும்பங்களின் வாழ்வாதாரம் உள்ளது. சுமார் ஒரு கோடி வாக்குகள் லாரி உரிமையாளர்கள் மற்றும் இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களிடம் இருக்கிறது. எனவே, எங்களின் கோரிக்கையை ஏற்கும் வரை லாரிகள் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறும். இந்த முறை ரேஷன் பொருட்கள் கொண்டு செல்லும் லாரிகளையும் நிறுத்த உள்ளோம்.


தகுதி சான்றிதழை புதுப்பிக்க கட்டணம் 10 மடங்கு உயர்த்தியுள்ளதை கண்டித்தும், அதனை திரும்ப பெற வலியுறுத்தியும் மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி வருகிற 25– ந் தேதி நள்ளிரவு முதல் தமிழகம் முழுவதும் லாரி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தெரிவி த்தார். இதன் மூலம் தமிழகத்தில் உள்ள 6.50 லட்சம் லாரிகள் இயக்க ப்படாது என தெரிவித்தார். ஏற்கனவே கடந்த 2 நாட்களாக டெல்டா மாவட்டங்களில் லாரிகள் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது. சுமார் 20,000 லாரிகள் டெல்டா மாவட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால், அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் ஏற்றிச்செல்லும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

# திண்டுக்கல் மாவட்டம்: முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்!

## பயனாளிகள் முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றி!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் இல்லத்திற்கே





சென்று தொற்றா நோய்களான உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களுக்கு பரிசோதனைகள் செய்து, மருந்துகள் வழங்குவதற்காக தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற மகத்தான திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். அதேபோல், தமிழகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மருத்துவ முகாம்கள் "கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்" மூலம் மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படுகிறது. அதேபோல் சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் "இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48" திட்டம் செயல்படுத்தப்படுகிறது. (2) உயிர் காக்கும் மருத்துவ சிகிச்சைகளை கட்டணமில்லாமல் ஏழை மற்றும் குறைந்த வருவாய் பெறும் பொதுமக்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத்திட்டம் 23.07.2009–அன்று தமிழக அரசால் தொடங்கப்பட்டது. அது முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் ஒரு குடும்பம், ஒரு ஆண்டிற்கு ரூ.5,00,000 வரை கட்டணமின்றி சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.1,20,000–க்கும் குறைவாக இருத்தல் வேண்டும். மேலும், விதவைகள், ஆதரவற்றவர்கள், வயது முதிர்வு ஓய்வு ஊதியம் பெறுபவர்கள், முகாம் வாழ் இலங்கை தமிழர்கள், முகாம்களுக்கு வெளியே வசிக்கும் பதிவு செய்த இலங்கை தமிழர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வருமான வரம்பு இல்லை. இத்திட்டத்தில் மொத்தம் 2,053 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைகளும், 52 வகையான நோய் பரிசோதனைகளும், அதனோடு தொடர்புடைய 11 தொடர் சிகிச்சைகளும், 8 உயர் அறுவை சிகிச்சைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் வரைமுறைப்படுத்தப்பட்ட சிகிச்சைகள் அனைத்தும் திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அனைத்திலும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (3) திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையும், 12 அரசு மருத்துவமனைகளும், 34 தனியார் மருத்துவமனைகளும், 3 பரிசோதனை மையங்களும் மற்றும் 3 ஆட்டிசம் மையங்களும் இத்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2022–2023–ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளில் 7,051 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக, ரூ.5.47 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் மருத்துவனைகளில் 8,963 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக ரூ.15.01 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 2023–2024–ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளில் 8,669 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக, ரூ.7.94 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் மருத்துவனைகளில் 9,780 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக ரூ.14.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 2024–2025–ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளில் 9,954 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக, ரூ.8.53 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் மருத்துவனைகளில் 9,212 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக ரூ.12.79 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. (4) 2025–2026–ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளில் 7,049 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக, ரூ.7.94 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் மருத்துவனைகளில் 6,470 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்காக ரூ.9.53 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது திண்டுக்கல் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை 4,83,195 குடும்ப அட்டைதாரர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 67,148 நபருக்கு ரூ.81.23 கோடி மதிப்பீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சைப் பெற்று பயனடைந்த பொதுமக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், அய்யலூரைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரி அவர்கள் வயது(45) என்பவர் தெரிவித்ததாவது:–



திருமதி ஈஸ்வரி

என் பெயர் ஈஸ்வரி, நான் வேடசந்தூர் வட்டம், அய்யலூரில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் சுப்பிரமணி கூலி வேலை செய்து, அதில் கிடைக்கும் வருமானத்தில்தான் நாங்கள் குடும்பம் நடத்தி வருகிறோம். எனக்கு 4 மாதங்களுக்கு முன்னர் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனே அருகில் உள்ள மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டபோது, இருதய வாழ்வு அடைப்பு ஏற்பட்டுள்ளது. இருதய வாழ்வு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (5) கூலி வேலை செய்து வரும் எங்களுக்கு இருதய வாழ்வு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் அளவிற்கு போதிய பணம் வசதி இல்லை. அதனால் மிகவும் கவலை அடைந்தோம். அப்போதுதான், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சிகிச்சை பெற உறவினர்கள் ஆலோசனை தெரிவித்தனர். இத்திட்டத்தில் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை மேற்கொள்ளலாம் என்பதை அறிந்து திண்டுக்கல்லில் தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சைக்காக சேர்ந்தேன். மருத்துவர்கள் பரிசோதனை செய்து, இருதய வாழ்வு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். மருத்துவமனையில் என்னை நல்ல முறையில் கவனித்துக்கொண்டார்கள். சிகிச்சைக்குப் பின்னர் நான் நலமாக உள்ளேன். தற்போது, அனைத்து வீட்டு வேலைகளையும் என்னால் பார்க்க முடிகிறது. என்னைப்போன்ற ஏழைக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. ஏழைகளை பாதுகாக்கும் வகையில் மருத்துவத் திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என வேடசந்தூர் வட்டம், அய்யலூரைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரி அவர்கள் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், புதுச்சத்திரம் அண்ணாநகரை சேர்ந்த திருமதி சித்ரா அவர்கள் வயது(42) என்பவர் தெரிவித்ததாவது:–



திருமதி சித்ரா

என் பெயர் சித்ரா. நான் புதுச்சத்திரம் அண்ணாநகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் பாலன், விவசாயம் செய்து வருகிறார். நான் தினசரி தோட்டத்திற்கு வேலைக்கு சென்று வந்தேன். கடந்த சில மாதத்திற்கு முன்பு தோட்டத்திற்கு சென்ற போது எதிர்பராதவிதமாக கீழே விழுந்து முதுகு தண்டுவடத்தில் வலி ஏற்பட்டது. தனியார் மருத்துவமனைகளுக்கு சிசிச்சை மேற்கொள்ள சென்றேன். (6) அப்போது மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் தண்டு வடத்தில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். அறுவை சிகிச்சை மேற்கொள்ள பணத்திற்கு என்ன செய்வது என்று கவலையுடன் இருந்தேன். அப்போதுதான், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சிகிச்சை பெற மருத்துவர் ஆலோசனை வழங்கினார். இத்திட்டத்தில் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை மேற்கொள்ளலாம் என்பதை அறிந்து திண்டுக்கல்லில் தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சைக்காக சேர்ந்தேன். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மேற்கொள்ள எனக்கு ஏற்பாடு செய்து, தண்டுவடம் அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். அறுவை சிகிச்சை மேற்கொண்ட பின்னர் மருத்துவமனையில் என்னை நல்ல முறையில் கவனித்துக்கொண்டனர்கள். தற்போது நல்ல முறையில் எனது அன்றாட வேலைகளை பார்த்துகொள்ள முடிகிறது. தற்போது ஒவ்வொரு வாரமும் மருத்துவ பரிசோதனைக்கு சென்று வருகிறேன். எங்களைப்போன்ற ஏழை, எளிய மக்களின் சிரமத்தை தவிர்க்கும் வகையில் இத்தகைய சிறப்பான திட்டத்தை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், எனது குடும்பத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என புதுச்சத்திரம் அண்ணாநகரை சேர்ந்த திருமதி சித்ரா அவர்கள் தெரிவித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை, எளியோர்கள் மருத்துவ ரீதியாக சிகிச்சை பெற்று பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வரருகிறார்கள். தமிழக மக்களின் வாழ்வில் ஒளிவிளக்கேற்றி, அவர்கள் மட்டுமல்லாமல் அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் மற்றும் அவர்களின் வருங்கால சந்ததியினரையும் பாதுகாத்து, வாழ்வில் முன்னேற்றம் அடைய வழிவகை செய்துள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.



தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலரின் 167–வது பிறந்தநாளையொட்டி, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா. வைத்திநாதன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (நினைவகங்கள்) தமிழ்செல்வராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வயது கட்டுப்பாடு; மத்திய அரசு பரிசீலனை!

புதுடில்லி, பிப். 18–

சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வயது கட்டுப்பாடு விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். டில்லியில் நடந்து வரும் ஏஐ மாநாட்டில் நேற்று (பிப்ரவரி 17) அவர் பேசியதாவது; ஏஐ மூலம் டீப் பேக் (Deepfake) வீடியோக்கள் சமூகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறி வருகின்றன. நமது குழந்தைகளையும், சமூகத்தையும் இந்த அச்சுறுத்தலில் பாதுகாக்க வேண்டும். எனவே, இதனை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவது அவசியமாகும். நெட்பிளிக்ஸ், யுடியூப், மெட்டா அல்லது எக்ஸ் உள்பட எந்த நிறுவனமாக இருந்தாலும், அரசின் சட்ட த்திற்குட்பட்டே செயல்பட வேண்டும். எனவே, சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவதற்கான வயது கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. இது தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. டீப் பேக் விவகாரம் குறித்து பார்லி குழு விரிவாக ஆய்வு செய்துள்ளது. இது தொடர்பாக பார்லியில் அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்தை உருவாக்கி கடுமையான நடவடிக்கைகள் கொண்டு வரப்படும், இவ்வாறு அவர் கூறினார்.

## அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை மூலம்

# சென்னையில் நடைபெற்ற விழாவில் மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு சிறந்த சமூக சேவகருக்கான விருது!

மதுரை, பிப். 18–

அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை மூலம் சென்னையில் நடைபெற்ற விழாவில் மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு சிறந்த சமூக சேவகருக்கான விருதினை பிரபல நடிகர் கே. பாக்யராஜ் வழங்கிய போது எடுத்த படம். அருகில் இடமிருந்து அறக்கட்டளை நிறுவனர் நல்லதம்பி, நீதியின் குரல் நிறுவனர் சி. ஆர்.பாஸ்கரன் ஆகியோர் உள்ளனர் *அறமும் தர்மமும் செய்வது நம்மை காக்கும்* *இயக்குனர் கே.பாக்யராஜ் பேச்சு* மதுரை, பிப். 18– அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை விழாவில், மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு பிரபல நடிகரும், இயக்குனருமான கே.பாக்யராஜ் சிறந்த சமூக சேவகருக்கான விருது வழங்கி பாராட்டினார். *அறம் விருதுகள்* சென்னை நாரத கான சபாவில் 'அறம் செய்ய விரும்பு' அறக்கட்டளை மூலம் அறம் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. நீதியின் குரல் நிறுவனர் சி.ஆர்.பாஸ்கரன் தலைமை தாங்கினார். அறக்கட்டளை நிறுவனர் பூ.நல்லதம்பி வரவேற்றார். விழாவில் பிரபல இயக்குனர் கே. பாக்யராஜ் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பல்வேறு துறையில் சாதனை படைத்த பெருமக்களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டினார். 'மதுரையின் அட்சயப்பாத்திரம் ட்ரஸ்ட்' மதுரையில் கடந்த 6 ஆண்டுகளாக ரோட்டோரத்தில் உள்ள வறியவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மருத்துவமனைகளில் தினமும் 300 பேருக்கு, மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் மதிய உணவை வழங்கி வருகிறது. இதுவரை சுமார் 6 லட்சத்திற்கும்



மேற்பட்ட வறிய மக்களின் பசியாற்றும் சேவையை தொடர்ச்சியாக செய்து வரும் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு 'சிறந்த சமூக சேவகர்' விருதை கே. பாக்யராஜ் வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது; "சென்னையில் ரோட்டில் கிடந்த 35 பவுன் நகையை எடுத்த பெண் தூய்மைப் பணியாளர், உரிய நபரிடம் கொண்டு சேர்த்தார். இதுதான் அறம். இது போன்ற அறம் செய்வோர் நாட்டில் பலர் இருக்கின்றனர். அவர்கள் எதிர்பார்க்காவிட்டாலும் கூட, அவர்களை போற்றுவதும் பாராட்டுவதும் நமது கடமை. இது போன்ற செயல்களின் மூலமாக அறம் காக்கப்பட வேண்டும். தர்மம் தலைகாக்கும் என்பர்.

நம் தலையை காக்கும் என்ற சுயநலத்தோடு தர்மம் செய்யக்கூடாது அதனை தர்ம சிந்தனையோடு செய்ய வேண்டும். புகழ்பெற்ற கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில். நாடு முழுவதும் அவரது பெயரும் புகழும் ஓங்கி இருந்தது. ரோம் நகரில் மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க, புகார்பெட்டி வைக்கும் வழக்கம் உண்டு. ஒரு சமயம் அரிஸ்டாட்டில் சாலையில் சென்றபோது, அங்கிருந்த முதியவர் புகார் பெட்டியில் போட ஒரு கடிதம் எழுத உதவும்படி சொன்னார். அவரிடம் புகார் என்னவென்று கேட்க, நாட்டில் எங்கு பார்த்தாலும் 'அரிஸ்டாட்டில்.. அரிஸ்டாட்டில்..' என அவர் பெயர் தான் கேட்கிறது. அதனால் அவரை நாடு கடத்த வேண்டும் என்றாராம். பெயர், புகழ் வந்தாலும் அதனை உச்சிக்கு எடுத்துச் செல்லக்கூடாது. அப்போதும் எளிமையோடும் பணிவோடும் இருக்க வேண்டும். இன்று விருது பெற்றிருக்கும் பண்பாளர்கள் அத்தகையவர்கள் தான். அறம் செய்தோருக்கு அறம் அறக்கட்டளை அறம் விருதுகளை வழங்கி அறத்தை நிலைநாட்டி இருக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020